//பதிவஞ்சல்//

அனுப்புநர்

திருமதி. வ.மு. சீதா,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்
நல அலுவலர்,
வேலூர் - 9.

பெறுநர்

அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்

ந.க.எண்: என்2/20502/2023, நாள்: 12.06.2023

அய்யா,

பொருள்: பிற்படுத்தப்பட்டோர் (ம) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலம் - கல்வி விடுதிகள் - வேலூர் மாவட்டம் - 2023-2024 - விடுதிகளில் மாணவ, மாணவிகளை சேர்த்தல் - தொடர்பாக.

பார்வை: பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடித எண்: பி2/3390/2023, நாள்: 12.05.2023.

****

வேலூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 18 பள்ளி / கல்லூரி விடுதிகளில் 2023-2024 ஆம் கல்வியாண்டில் மாணவ, மாணவியர்களை சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விடுதிகளில் எவ்வித செலவினமும் இல்லாமல் பின்வரும் சலுகைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

i. அனைத்து விடுதி மாணவ / மாணவியருக்கு உணவு தங்கும் வசதியும் அளிக்கப்படுகிறது.

ii. மாணவ, மாணவியர்களுக்கு கட்டணம் ஏதுமின்றி தரமான வகையிலும், சுகாதார முறையிலும் உணவுகள் சமைத்து வழங்கப்படுகின்றன. (நாள்தோறும் வழங்கப்படும் உணவுப்பட்டியல் விவரம் இணைக்கப்பட்டுள்ளது.)

iii. 4 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 இணைச் சீருடைகள் வழங்கப்படும்.

iv. 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியருக்கு சிறப்பு வழிகாட்டிகள் வழங்கப்படும்.

v. ஆண்டுதோறும் மூன்று முறை மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது.

vi. விடுதி மாணவ, மாணவியர்களிடையே கலைத்திருவிழா எனும் பெயரில் ஆண்டுதோறும் இலக்கிய (ம) விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள் (ம) பாராட்டுச் சான்றுகள் வழங்கி ஊக்கப்படுத்தப்படுகிறது.

vii. 10 (ம) 12 ஆம் வகுப்பு முடித்த பின்னர் மேற்படிப்புகளை தொடர ஆண்டுதோறும் வேலைவாய்ப்புத்துறை மூலம் வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி நடத்தி மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

viii. விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு சுகாதார முறையில் குடிநீர் வசதி வழங்க Water Purifer பொருத்தப்பட்டுள்ளது.

ix. விடுதி மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டு பொருட்களாக Chease, Caroom உள்ளிட்ட உபகரணங்கள் உள்ளன.

x. விடுதி மாணவ, மாணவியர்களுக்கு பாய்கள் (ம) போர்வைகள் வழங்கப்படுகின்றன.

xi. விடுதிகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டு, பொதுஅறிவு மேம்படுத்துவதற்கான பல்வேறு வகையான புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

xii. விடுதி மாணவ, மாணவியர்களின் நலனுக்காக நாள்தோறும் தமிழ் (ம) ஆங்கில நாளிதழ்கள் வாங்கி வழங்கப்படுகின்றன.

xiii. விடுதிகள் தோறும் கணினி வசதிகள் பொருத்தப்பட்டு, இணைய வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

xiv. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழ்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இது போன்ற பல்வேறு வகையான வசதிகள் விடுதிகளில் செய்யப்பட்டு, மாணவ, மாணவியர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த இத்துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

<u>விடுதிகளில் சேருவதற்கான தகுதிகள்</u>

- பெற்றோர் / பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8 கி.மீ.க்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியருக்கு பொருந்தாது.

தகுதியுடைய மாணவ / மாணவியர் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர் / காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்திலோ இலவசமாக பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பள்ளி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்தில் 15.06.2023-க்குள் சமர்ப்பிக்க வேண்டும். மாணவ, மாணவியர்கள் விண்ணப்பிக்கும்பொழுது சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் யாதும் அளிக்கத் தேவையில்லை. விடுதியில் சேரும்போது மட்டும் சான்றிதழ்களைஅளித்தால் போதுமானது.

மேற்காணும் சலுகைகளை தங்களது பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தெரியபடுத்தி, தகுதியுள்ள மாணவ, மாணவியர்கள் விடுதிகளில் சேர உதவிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு: உணவுப் பட்டியல்

12/6/2023

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்
நல அலுவலர், வேலூர் - 9.

நகல்:
1. முதன்மை கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்
2. மாவட்ட கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்

— அனைத்து பள்ளிகளுக்கும் மேற்காணும் விவரங்களை தெரிவிக்கும்பொருட்டு

3. ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை - 5.
4. ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை - 5.

— தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

அரசாணை (நிலை) எண்.26, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந1(2))த்துறை, நாள் 25.03.2022–ன் இணைப்பு

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி விடுதி மாணவ/மாணவியருக்கு வழங்கப்பட வேண்டிய உணவு வகைகள் அடங்கிய திருத்தப்பட்ட உணவுப் பட்டியல்

(i) காலை (பள்ளி மற்றும் கல்லூரி)

| கிழமை | உணவு வகைகளின் விவரம் |
|---|---|
| திங்கள் | சேமியா கிச்சடி, தக்காளி சட்னி/சாம்பார் |
| செவ்வாய் | பூரி, மசால் |
| புதன் | இட்லி, சாம்பார், சட்னி |
| வியாழன் | இடியாப்பம், பட்டாணி குருமா (அல்லது) தேங்காய் பால். |
| வெள்ளி | பொங்கல் (அல்லது) வரகு பொங்கல் (அல்லது) தினை அரிசி பொங்கல், கத்தரிக்காய் கொத்சு, வடை. |
| சனி | ரவா கிச்சடி, தேங்காய் சட்னி |
| ஞாயிறு | தோசை (அல்லது) நவதானிய தோசை, சாம்பார், சட்னி |

(ii) மதியம் (பள்ளி மற்றும் கல்லூரி)

| கிழமை | உணவு வகைகளின் விவரம் |
|---|---|
| திங்கள் | சாதம், சாம்பார், இருவகை பொரியல், ரசம், மோர், முட்டை (அல்லது) சாதம், சாம்பார், 1 பொரியல், ரசம், மோர், முட்டை மசாலா |
| செவ்வாய் | காய்கறி பிரியாணி, காய்கறி குருமா, முட்டை |
| புதன் | சாதம், ஆட்டிறைச்சி/ கோழி குருமா (அல்லது) மட்டன்/சிக்கன் குழம்பு, பொரியல், மோர் |
| வியாழன் | தக்காளி சாதம் (அல்லது) லெமன் சாதம் (அல்லது) தயிர் சாதம், உருளை பொரியல், முட்டை |
| வெள்ளி | சாதம், காரக்குழம்பு, பொரியல்/கூட்டு, ரசம், மோர், முட்டை. |
| சனி | புதினா சாதம் (அல்லது) காரட் சாதம் (அல்லது) கறிவேப்பிலை சாதம், முட்டை, அப்பளம்/பருப்பு துவையல் |
| ஞாயிறு | சாதம், முட்டை குருமா, ரசம், மோர் |

(iii) இரவு (பள்ளி மற்றும் கல்லூரி)

| கிழமை | உணவு வகைகளின் விவரம் |
|---|---|
| திங்கள் | சப்பாத்தி, குருமா |
| செவ்வாய் | இடியாப்பம், குருமா (அல்லது) காய்கறி கூட்டு (Vegetable Stew) |
| புதன் | காய்கறி புலாவ், குருமா/ரைத்தா |
| வியாழன் | ஊத்தாப்பம், சட்னி, சாம்பார் |
| வெள்ளி | கோதுமை தோசை, தக்காளி சட்னி |
| சனி | சாதம், சாம்பார், பொரியல், ரசம் |
| ஞாயிறு | தக்காளி சாதம் (அல்லது) சாம்பார் சாதம், வறுவல் |

(iv) ஆட்டிறைச்சி/கோழி இறைச்சி வாரத்திற்கு ஒரு நாள்

| நாள் | கல்லூரி விடுதி | பள்ளி விடுதி |
|---|---|---|
| 1 – வது மற்றும் 3 –வது வாரம் ( புதன் கிழமை) | ஆட்டிறைச்சி – 80 கிராம் வீதம் | ஆட்டிறைச்சி – 80 கிராம் வீதம் |
| 2 – வது மற்றும் 4 –வது வாரம் ( புதன் கிழமை) | கோழி இறைச்சி– 120 கிராம் வீதம் | கோழி இறைச்சி – 100 கிராம் வீதம் |

(v) முட்டை/வாழைப்பழம் (பள்ளி மற்றும் கல்லூரி)

நாள்தோறும் வழங்கப்படும் உணவு வகைகளுடன் வாரத்திற்கு ஐந்து முட்டைகள் என ஒரு மாதத்திற்கு ஒரு மாணவருக்கு 20 முட்டைகள்

முட்டை சாப்பிடாத மாணவ, மாணவியருக்கு ஒரு வாழைப்பழம்.

(vi) மாலை நேர சிற்றுண்டி (பள்ளி மற்றும் கல்லூரி)

நாள்தோறும் மாலை நேரங்களில் வேகவைத்த பயறுகள் (சுண்டல்) மற்றும் சுக்குமல்லி காபி/ கருப்பட்டி தேநீர்

(vii) பண்டிகை கால சிறப்பு உணவு (பள்ளி மற்றும் கல்லூரி)